செ.வெ.எண்: 706 நாள்: 19.10.2019

## நாடு முழுவதும் குழந்தைகள் தொடர்பான வரபெற்ற 4,500 குறைகள் தீர்க்கப்பட்டுள்ளது.

## குழந்தைகள் திருமணத்திற்கு உறுதுணையாக இருக்கும் பெற்றோர்களின் மீது வழக்கு பதிவு செய்ய அறிவுறுத்தல்.

## தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணைய உறுப்பினர் டாக்டர் ஆர்.ஜி.ஆனந்த் அவர்கள் தகவல்.

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் இன்று (19.10.2019) குழந்தைகள் போதை பொருள் பயன்படுத்துவதால் ஏற்படும் பிரச்சனைகள் குறித்து தொடர்புடைய துறையின் மூலம் தடுத்திட பயன்படுத்தப்படும் உத்திகள் குறித்த ஆய்வுக் கூட்டம் தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணைய உறுப்பினர் டாக்டர் ஆர்.ஜி.ஆனந்த் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆய்வு கூட்டத்தில் தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணைய உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததாவது.

இந்தியாவின் எதிர்கால தூண்கலாக விளங்கவுள்ள குழந்தைகளை அனைத்து நிலைகளிலும் சிறப்பானவர்களாக உருவாக்குவதே நோக்கமாக கொண்டு பாரத பிரதமர் அவர்கள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக குழந்தைகளுக்கு எதிராக குற்றங்களை முற்றிலும் தடுத்திடவும், அவர்களின் மேம்பாட்டிற்கு உரிய உதவிகளை அளித்திடுவதை உறுதி செய்யும் வகையில் இதுபோன்று அரசு அலுவலர்களுடனான கலந்தாலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இதுவரை தேசிய அளவில் 19 மாநிலங்களுக்கு நேரடியாக சென்று குழந்தைகள் தொடர்பாக 5,000 குறைகள் கேட்டறியப்பட்டு, அவற்றில் 4,500 குறைகள் தீர்க்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தை பொருத்தவரை குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பாக காவல்துறையினரின்

செயல்பாடுகள் பாராட்டுதலுக்கு உரியதாகும். குறிப்பாக குழந்தைகள் திருமணம் தொடர்பான சம்பவங்கள் நிகழும் போது அதற்கு உறுதுணையாக இருக்கும் பெற்றோர்களின் மீது வழக்கு பதிவு செய்ய வேண்டியது அவசியமான ஒன்றாகும். ஏனெனில் அரியாத வயதில் உள்ள குழந்தைகளை மீண்டும் இதுபோன்ற முயற்சிகளில் ஈடுபடுவதை தவிர்க்க வழக்கு பதிவு முக்கியமாகிறது.

குழந்தை தொழிலாளர்கள் பணியில் அமர்த்தப்படாததை உறுதி செய்யும் வகையில் அலுவலர்கள் தொடர்ந்து கண்காணித்திடவும், குழந்தைகளுக்கு எதிரான புகார்கள் தொடர்பாக அணுக வேண்டிய விபரங்கள் குறித்தும், போதிய விழிப்புணர்வை பொதுமக்களுக்கு தொடர்புடைய அலுவலர்கள் ஏற்படுத்த வேண்டும். மேலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் பாதிக்கப்படும் குழந்தைகளை மீட்டு தற்காலிகமாக தங்க வைக்க கூடிய வகையில் தற்காலிக குழந்தைகள் காப்பகம் அமைக்க மாவட்ட நிர்வாகத்திற்கு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

தொடர்புடைய அலுவலர்கள் குழந்தைகள் நலனை பேணிகாக்க வேண்டியதன் அவசியத்தை நன்கு உணர்ந்து கொண்டு குழந்தைகள் நலனை சிறப்பாக செயல்படுத்தும் மாவட்டமாக புதுக்கோட்டை மாவட்டத்தை திகழ செய்ய வேண்டியது அலுவலர்களின் கடமையாகும். இவ்வாறு தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணைய உறுப்பினர் டாக்டர் ஆர்.ஜி.ஆனந்த் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வு கூட்டத்தின் போது மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.டி.சாந்தி அவர்கள், தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணைய உறுப்பினர் திரு.பி.மோகன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் இளங்கோவன், இணை இயக்குநர் (மருத்துவம்) மரு.சந்திரசேகர், மாவட்ட சமூக நல அலுவலர் ரேணுகா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முத்துவடிவேல், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் இளையராஜா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**